Chundikuli Branch Library

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆவணி 31 | [16-09-1993] | வியாழக்கிழமை | ஓசை 210

Chundikuli Branch Library

## பரீட்சைகளில் உறுப்பெழுத்துக்கும் புள்ளி வழங்கத் திட்டம்

பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளில் மாற்றம் செய்யப் படவுள்ளன. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சர் எம். லொக்குபண்டாரா கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சர்களுடன் நடத்திய மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. பள்ளிக் கூடங்கள் மட்டத்திலும், பரீட்சைத் திணைக்களத்தினாலும் நடத்தப்படும் பரீட்சைகளில் மாணவரின் உறுப் பெழுத்துக்கும், இலக்கணத்துக்கும் புள்ளிகள் வழங்குவதென்பது இந்தப் புதிய மாற்ற மாகும். இதன் பிரகாரம் இலக்கணச் சுத்தியாகவும், உறுப்பெழுத்துத் திறமைக்கும் மேலதிகப் புள்ளிகள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.



தியாகி லெப். கேணல் திலீபன் நினைவு நிகழ்வுகள் நேற்று நல்லூரில் ஆரம்பமாகிய போது தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் மாலையிடுவதையும் அருகே யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதியையும் படத்தில் காணலாம்.

# சமாதான திட்டம் எதையும் அரசாங்கம் ஏற்பதற்கில்லை!

## இராணுவ வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தை என்பதற்கு தற்பொழுது இடமே இல்லை. சமாதானப் பேச்சு வார்த்தை எதுவும் நடைபெறும் முன்னர் விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட வேண்டும். அதுவரை எவருடைய சமாதானத் திட்டமும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது இவ்வாறு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அப்பத்திரிகை, அரசாங்கம் விடுதலைப் புலிகளை முற்றாக தோற்கடிக்கத் திட்டமிட்டுள்ளது. அதுவரை அமைச்சர்தொண்டமான் உட்பட எவருடைய சமாதானத் திட்டத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது எனவும் சமாதானப்பேச்சுக்கள் எதுவும் நடைபெறுவதற்கு முன்னரே புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக போரில் வெற்றி பெற

குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை மண்கிண்டிமலைத் தாக்குதலும், கடற் படைக்குச் சொந்தமானமூன்று படகுகளை புலிகள் தகர்த்து ஆயுதங்களைக் கைப்பற்றியதை அடுத்து புலிகளின் கை ஓங்கியிருப்பதாக பலதரப்பினராலும் கூறப்படுகிறது. எனவே இராணுவ நடவடிக்கை மூலம் பலம்பொருந்திய நிலையினை அடைய அரசாங்கம் முயல்வதாக கூறப்படுகிறது.

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி–பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## 802 பேர் மீது வழக்கு

ஜெயலத் விசாரணைக்குழு 802 தடுப்புக்காவலில் உள்ள தமிழர்களுக்கு எதிராக நீதிமன்ற வழக்கு தொடுப்பதற்கு ஏற்பாடு செய்து வருகிறது. மேலும் 256 பேர் மீது நீதிமன்ற வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும் அவை விரைவில் விசாரணைக்கு வரலாம் என்றும் ஜெயலத்விசாரணைக் குழு அதிகாரி தெரிவித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது

## வால்டர் பெர்னாண்டோ ராஜினாமா அதிர்ச்சி தருகிறது

### ஐலண்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவம் பலத்த பின்னடைவுகளைச் சந்திக்கும்போது தாமும் ஏதாவது மாற்றம் செய்கின்றோம் என்பதற்காக அரசியல்வாதிகள் கட்டமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி விஜயதுங்கா கால அவகாசம் கோருகிறார்

[கொழும்பு]

'பயங்கர வாதத்தை' இரவோடிரவாக முடிவிற்கு கொண்டுவர முடியாது. கால அவகாசம் தாருங்கள் மூன்று அல்லது நான்கு மாதங்களில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக் காட்டுகிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி டி.பி.

நீங்கள் பொறுமையாக இருங்கள். 'பயங்கரவாதத்தை' முடிவிற்கு கொண்டு வர எனக்கு கால அவகாசம் தாருங்கள். பயங்கரவாதம் நிச்சயம் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இதை இரவோடிரவாகசெய்து முடிக்க முடியாது. மூன்று

## 71 பத்திரிகைகளில் 70 அரசுக்கு எதிரானவை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]

அரசு 71 பத்திரிகைகளை அனுமதித்துள்ளது ஆனால்

இயங்கி வருகின்றன அதே வேளை பத்திரிகைகள் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்

# தியாகிதிலீபன்நினைவுநிகழ்வு



தியாகி லெப். கேணல் திலீபன் நினைவு நிகழ்வுகள் நேற்று நல்லூரில் ஆரம்பமாகிய போது தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் மாலையிடுவதையும் அருகே யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதியையும் படத்தில் காணலாம்.

# தியாகிதிலீபன்நினைவுநிகழ்வு எழுச்சிபூர்வ ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]
தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நினைவு நாட்களை நினைவு கூருவதும், அஞ்சலி செலுத்துவதும் நேற்றுமுதல் உணர்வு பூர்வமாக ஆரம்பமாகியது.

இந்திய-இலங்கை அரசுகளின் துரோகச் செயல்களை உலகிற்கு அம்பலப்படுத்திய தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகசிறுவர்கள் மாணவர்கள், வயோதிபர்கள், பெண்கள் உட்பட அனைத்து தரப்பினரும் வயது வேறுபாடு இன்றி திரண்டு சென்று அஞ்சலி செலுத்தினர். பலவேறு இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தியாகி திலீபனின் நினைவுப் பந்தல்களில் வைக்கப்பட்டிருந்த உருவப்படங்களுக்கு மலர்கள் தூவியும், மலர் மாலைகள் அணிவித்தும் அஞ்சலி செலுத்தினர்.

அத்துடன் பல்வேறு பகுதிகளில் வட்டப்பிரிவு ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டங்களிலும் அதிகளவு மக்கள் கலந்துகொண்டனர்.

யாழ் குடாநாட்டில் மட்டுமல்லாது கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வைபவங்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் திலீபனின் பெரிய அளவிலான உருவப்படம் வைக்கப்பட்டு யாழ். மாவட்டத் தளபதி திரு. அன்பு அவர்களின் ஈகச்சுடரேற்றலுடன் காலை 9 மணியளவில அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் அவர்கள் தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்தார், இரண்டாவது படத்திற்கு தீவகக்கோட்ட அரசி

(3ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளி மோதலில் 2 போராளிகள் வீரச்சாவு

திருக்கோணமலை நிலாவெளிப் பகுதியில் கடந்த ஞாயிறன்று இரவு 7.30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் லிங்கம்/ விற்கொடியோன் (சிவஞானம் ஜெயசங்கர் சாம்பல்தீவு, திருமலை), லெப்டினன்ட் வாசன் (கந்தசாமி முரளிதரன் ஐயனார் திடல், தம்பலகமம், திருமலை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



லெப். லிங்கம்
[விற்கொடியோன்]



லெப். வாசன்

...அரசாங்கம் விடுதலைப் புலிகளை முற்றாக தோற்கடிக்கத்

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்றும், நாளையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

...அமைச்சர்தொண்டமான் உட்பட எவருடைய சமாதானத் திட்டத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது எனவும் சமாதானப்பேச்சுக்கள் எதுவும் நடைபெறுவதற்கு முன்னரே புலிகள் தோற்கடிக்கப்பட வேண்டும் எனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக

இதேவேளை மண்கிண்டி மலைத் தாக்குதலும், கடற்படைக்குச் சொந்தமானமூன்று படகுகளை புலிகள் தகர்த்து ஆயுதங்களைக் கைப்பற்றியதை அடுத்து புலிகளின் கை ஓங்கியிருப்பதாக பலதரப்பினராலும் கூறப்படுகிறது. எனவே இராணுவ நட

போரில் வெற்றி பெற

## ஜனாதிபதி விஜயதுங்கா கால அவகாசம் கோருகிறார்

[கொழும்பு]
'பயங்கர வாதத்தைத்' இரவோடிரவாக முடிவிற்கு கொண்டுவர முடியாது. கால அவகாசம் தாருங்கள் மூன்று அல்லது நான்கு மாதங்களில் பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்துக் காட்டுகிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கா ஹங்குராகலவில நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

நீங்கள் பொறுமையாக இருங்கள். 'பயங்கரவாதத்தை' முடிவிற்கு கொண்டுவர எனக்கு கால அவகாசம் தாருங்கள். பயங்கரவாதம் நிச்சயம் முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும். இதை இரவோடிரவாகசெய்து முடிக்க முடியாது. மூன்று அல்லது நான்கு மாதங்கள் நீடிக்கும் என அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது தெரிவித்தார்.

...திய நிலையினை அடைய அரசாங்கம் முயல்வதாக கூறப்படுகிறது.

...என்றும் ஜெயலத்விசாரணைக் குழு அதிகாரி தெரிவித்துள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்றுசெய்திவெளியிட்டுள்ளது

## வால்டர் பெர்னாண்டோ ராஜினாமா அதிர்ச்சிதருகிறது

ஐலன்ட் தெரிவிப்பு

(கொழும்பு)
இராணுவம் பலத்த பின்னடைவுகளைச் சந்திக்கும்போது தாமும் ஏதாவது மாற்றம் செய்கின்றோம் என்பதற்காக அரசியல்வாதிகள் கட்டமைப்புகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக ஐலன்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்

(3ஆம் பக்கம் பார்க்க)

## 71 பத்திரிகைகளில் 70 அரசுக்கு எதிரானவை

பிரதமர் ரணில் தெரிவிப்பு

[கொழும்பு]
அரசு 71 பத்திரிகைகளை அனுமதித்துள்ளது ஆனால் இதில் 70 பத்திரிகைகள் அரசைத் தாக்கி எழுதி வருகின்றன. பத்திரிகைகள் தங்கு தடையின்றிச் சுதந்திரமாக இயங்கி வருகின்றன அதேவேளை பத்திரிகைகள் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றன. அரசின் கொள்கைகளை அனுசரித்து எழுதாக பத்திரிகைகளை அரசு சுவீகரிக்க

(3 ஆம் பக்கம் பார்க்க)

# வலிகாமத்தில் அகோர ஷெல்வீச்சு; ஒருவர் பலி; 12 பேர் படுகாயம்

## இரவு முழுவதும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் வடக்குப்பகுதி மீது பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத் தாக்குதல்களினால் ஒருவர் கொல்லப்பட்டதுடன், பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலத்த காயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 8-30 மணி முதல் 11மணிவரை தொடர்ச்சியாக வலி-வடக்குப் பகுதிகளான சுன்னாகம், ஊரெழு, உடுவில், கந்தரோடை, மயிலணி, றொட்டியாலடி, கோதியாவத்தை ஆகிய பொது மக்கள் வாழும் பகுதிகள் மீது இவ் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இவ் எறிகணைத் தாக்குதல் காரணமாக ஊரெழு தெற்கைச் சேர்ந்த கனகராசா தர்மினி [வயது 12] என்ற சிறுமி கொல்லப்பட்டுள்ளார். இவரது தாயும், தந்தையும் படுகாயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலில் ஊரெழு தெற்கைச் சேர்ந்த கனகராசா (வயது 44), மனோரஞ்சினி (வயது 29), எம். சுந்தர் [வயது 5), எஸ். கனகம்மா [வயது 50], எம். சுசீலா [வயது 36], சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ். மனோகரன் [வயது 31], கே. இராஜேஸ்வரி [வயது 28], எஸ். விக்னேஸ்வரன் [வயது 14], மயிலணி வடக்கைச் சேர்ந்த இராசரத்ணம் மாணிக்கம் [வயது 48), உடுவில் கிழக்கைச் சேர்ந்த அருள்ச்செல்வி [வயது 18] கோதியாவத்தையைச் சேர்ந்த இராசசேகரம் (வயது 68), எஸ். இராஜகிளி [வயது 58] ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

## தியாகி திலீபன் நினைவு உண்ணாவிரதம், சிரமதானம்

(யாழ்ப்பாணம்)
தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபன் நினைவாக வட்டரீதியாக நடைபெற்று வரும் உண்ணாவிரதங்கள் நாளை பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

சங்கானை வட்டம் சங்கானை அரசடி வைரவர் கோவில் முன்றலில் சுழிபுரம் சிற்றூர் மக்கள், கோப்பாய் வட்டம் நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் கோவில் முன்றலில் நீர்வேலி ப.நோ.கூ. சங்கம், மின்சார சபை ஊழியர்கள், சண்டிலிப்பாய் வட்டம் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவில் முன்றலில் சண்டிலிப்பாய் சிற்றூர் மக்கள், உடுவில்/தெல்லிப்பழை வட்டம் சுன்னாகம் சிவன்கோவில் முன்றலில் இணுவில் சிற்றூர் மக்கள், யாழ்ப்பாண வட்டம் நல்லூர் கந்தசாமி கோவில் வீதியில் சிகை அலங்கரிப்பாளர் சங்கம், நல்லூர் வட்டம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியில் அரியாலை/நல்லூர் மக்கள் கரவெட்டி வட்டம் நெல்லியடி சாமியன் அரசடியில் கட்டைவேலி கப்புது சிற்றூர் மக்கள், உடுப்பிட்டி வட்டம் உடுப்பிட்டி மதி வைரவர் கோவிலடியில் கெருடாவில், கெருடாவில் தெற்கு சிற்றூர் மக்கள், பருத்தித்துறை வட்டம், அல்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## எறிகணை வீச்சு

(வடமராட்சி)
பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி படையினர் பலஆட்லறி ஷெல்களை குடியிருப்புப் பகுதி நோக்கி ஏவிவிட்டனர்.

ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்கள் தொண்டமனாறு அக்கரைப் பகுதியில் நேற்று பகல் 12 10 மணியளவில் விழுந்து வெடித்தன, எனினும் சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவரவில்லை. (யோ)

அளம்பில் கடற்பரப்பிலிருந்து

## கடற்படை தாக்குதல் மீனவர்காயம் ஆலயம்சேதம்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு அளம்பில் கடற்பரப்பிலிருந்து மூன்று பீரங்கிப்படகுகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட தாக்குதலில் மூன்று மீனவர்கள் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கடற்படையினர் பகல் 12 45 மணி தொடக்கம் 1 10 வரை மேற்கொண்ட இத்தாக்குதலில் வள்ளங்கள், வலைகள் என்பனவற்றுடன் அளம்பில் வேளாங்கண்ணி ஆலய மணிக்கூட்டுக் கோபுரமும் சேதமடைந்துள்ளது.

அளம்பிலைச் சேர்ந்த இ. குமார் [18], கா. பொடிசுந்தரம் (50), பி. கணேஸ் [17] ஆகியோரே இச் சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்
இல்லையேல் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.
-திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம் [சி-7423]

## வரி விளம்பரம்

### தவறவிடப்பட்டது

சங்கானைச் சந்தையில் 13-9-93 காலை சிலைப்பையுடன் இரு சாதகங்கள் தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து NKS. மரக்கறி வியாபாரி அல்லது நல்லையா தொட்டலடி சங்கானை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6030)

### ஆண்டு 4 புலமைப் பரிசில்

ஆண்டு 4ற்கு தொடர் பரீட்சை 19-09-93 ஞாயிறு முப 8 00, 11 00 நடைபெறும். வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். தூர இட மாணவருக்கு சனி ஞாயிறு வகுப்புகள் 18-09-93 சனி 4 00-600 ஆரம்பமாகும் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (6037)

### உடையமைத்தல் பயிற்சி நெறி

(நெல்லியடி)

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் உடையமைத்தல் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி கல்லூரி அதிபர் திரு இ விஜயரத்தினம் தெரிவித்தார் (30)

### சத்துணவு வழங்கப்படுகிறது

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் தனது கோப்பாய்ப் பிரிவில் சத்துணவுத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்ட இச் சத்துணவுத்திட்டத்தில் நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கு ஆகிய பகுதிகளில் சுமார் 90 வறிய சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சிறுவர்களுக்கு சத்துணவு மதிய உணவாக வழங்கப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மேலும் தனது பிரிவிற்குட்பட்ட பகுதிகளிற்கு விஸ்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [பா]

### பாராட்டும் கௌரவிப்பும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மண்ணுறவு:
17-10-1914

விண்ணுறவு:
17-08-1993

அமரர்

### சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

அன்பிற்கோர் திருவுருவாய்
பண்பிற்கோர் பிறப்பிடமாய்
வாழ்ந்த கடரொளிதான் மறைந்த தெங்கே
என்று தான் காண்போம்
ஆயிரம் நூற்றாண்டு சென்றாலும்
நாம் மறவோம்.

16-9-93 இன்று எமது இல்லத்தில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ராணி மில், நெல்லியடி. (5951)
உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
1971-01-11

தாயக மண்ணில்:
1991-09-16

### வீரவேங்கை துலாஞ்சலி

(சித்திராதேவி சோமசுந்தரம்)

தாயகம் மீட்டிட தன்னாவி வழங்கியே
சாதனை புரிந்து சரித்திரம் படைத்தாய்
ஈழம் வேண்டுமென்ற இளவேங்கை உன்கனவு-எம்
ஈரமான நெஞ்சங்களில் மறையாது ஒளிவீசும்.

மானப் போரிலே மணலாறு தன்னிலே
மாவீரராகி எம் மனங்களில் நிறைந்து விட்டாய்
ஈராண்டு போனாலும் மாறாது உன் நினைவு-மீண்டும்
ஈழமண்ணில் துளிர்த்தெழுவாய் துலாஞ்சலியே.

அம்மா, ஐயா, உடன்பிறப்புக்கள், மைத்துனர்கள், நண்பர்கள்.

புளியங்குளம், ஒட்டுசுட்டான், (6025)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



உருத்திரபுர மண்ணில்
17-05-1973

இதயபூமி மண்தனில்
16-09-1991

### வீரவேங்கை லோஜி

[தர்மலிங்கம் கௌரிமலர்]

தாயக மீட்புப் போரிலே எங்கள்
தலைவன் அணியிலே புலியானாய்.
பாயும் எதிரியை பாடையிலேற்றிடும்
பணியினில் சுழலும் புயலானாய்
இரக்கமற்ற வெறியனை வீழ்த்தியே
இதய பூமியில் விதையானாய்.

கேடில்ஸ் நகர், தெற்பலி, மிருசுவில். [6022]
— குடும்பத்தினர்

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
06.07.1970

மறைவு
28.08.1992

### பஞ்சரட்ணம் நிமல்

(பேராதனை பல்கலைக்கழக
பொறியியல்பீட மாணவன்)
2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

இன்று: 16.09.1993

தம்பிக்குட்டி உன்விழிபார்த்து மொழிகேட்டு
ஆண்டொன்று ஆனதடா

---

## நினைவு கூருகின்றோம் ...
## 1993-09-16

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-செங்கலடிப் பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்தசமயம் சிறிலங்கா அதிரடிப்படையினரின் சுற்றிவளைப்பில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**மைக்கல்** (நல்லையா பரந்தாசன் - ஏறாவூர் - மட்டு)

**சதீஸ்** (காமாட்சி சுந்தரம் சதீஸ்குமார் - மட்டு)

திருமலை - நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். சங்கிலி** (மாரிமுத்து மகேந்திரராசா - சிலங்கோவிலடி - திருமலை)

**சரவணன்** (சோமசுந்தரலிங்கம் அருண்குமார் - லிங்கநகர் திருமலை)

**யோகன்** (தம்பிராசா சந்திரயோகன் - சாம்பல்தீவு- திருமலை

**கோணேஷ்** (கந்தையா கௌரவன் - சணக் ஒழுங்கை திருமலை)

இதே முற்றுகையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**கந்தசாமி** ( — — நிலாவெளி - திருமலை)

முல்லைத்தீவு - முள்ளியவளைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 04 தமிழர்கள்.

1986 ஆம் ஆண்டு மட்டு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். கனெக்ஸ்** (ஞானமுத்து பேனாட் வேலன்-

**காவியநாயகன்** (மணியம் சிவஞானம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**எட்வின்** (சின்னையா பிரபாகரன்- அலம்பில்-மணலாறு)

**லெப். சுந்தர்** (தங்கையா கோவிந்தராசா -செல்வபுரம்- முல்லைத்தீவு)

**துலாஞ்சலி** (சித்திராதேவி சோமசுந்தரம் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு]

**2-ம் லெப். நவராஜ்** (பிறேமதாலா பிறேமரட்ணம்- கம்பைமடு - வவுனியா)

**சாயகுமார்/புலவன்** (வடிவேலு சுந்தரகுமார் - மகாரம்பைக்குளம் - வவுனியா)

**காந்தி** [மாரிமுத்து சதாசிவம் ரவிச்சந்திரன் - மன்னார் வீதி - வவுனியா]

**கப்டன் கஸ்ரோ** (இராமசாமி குமார் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)

**கப்டன் பகீரதன்** [கிருஸ்ணபிள்ளை அருணகிரிநாதன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**கிரஞ்சீவி** [வசந்தமணி ஏகாம்பரம் - வன்னேரிக்குளம்- கிளிநொச்சி]

**சுரேஸ்** [கந்தையா கனகலிங்கம் - உருத்திரபுரம்- கிளிநொச்சி]

**இதயா** (தேவரஞ்சினி தம்பிராசா - புளியம்பொக்கணை, கிளிநொச்சி)

**சுபன்** [கோவிந்தசாமி கணேசசேகரன் - தர்மபுரம்- கிளிநொச்சி)

**கிருஷ்ணா யோகன்** (சிவகுமார் சுதன் - கண்டாவளை பரந்தன் - கிளிநொச்சி)

**கப்டன் காசன்** [ஆசிர்வாதம் யோகேந்திரன் - பள்ளிக்குடா - பூநகரி]

**2-ம் லெப். சார்ஜகா** [மேரிமாக்கிரெற் தங்கராசா- வட்டக்கண்டல் - மன்னார்]

ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்ட இச் சத்துணவுத்திட்டத்தில் நீர்வேலி வடக்கு, நீர்வேலி தெற்கு ஆகிய பகுதிகளில் சுமார் 90 வறிய சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சிறுவர்களுக்குச் சத்துணவு மதிய உணவாக வழங்கப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மேலும் தனது பிரிவிற்குட்பட்ட பகுதிகளிற்கு விஸ்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [பா]

## பாராட்டும் கௌரவிப்பும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரியில் கல்வித்துறையிலும் விளையாட்டு துறையிலும் சாதனைகள் புரிந்த மாணவிகள் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத்தால் பாராட்டப்பட்டு கௌரவிக்கப் பட்டதோடு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. (25)

## சம்பளம் அதிகரிப்பு

[கொழும்புத்துறை]

யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த யூலைமாதம் தொடக்கம் அரசினால் வழங்கப்பட வேண்டிய புதிய சம்பள அதிகரிப்பு செப்டெம்பர் மாதச்சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [24]

## கல்வி பயில வசதி

யாழ் கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்தில் இரவு நேரங்களில் 6 30 மணி தொடக்கம் 8 30 மணிவரை இரண்டு பெற்றோமக்ஸ் வெளிச்ச உதவியுடன் இலவச கல்வி பயில வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக நிலையச் செயலாளர் திரு. கோ. தியாகராசா தெரிவித்துள்ளார். [24]

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பிரதேச எல்லைக்குட்பட்ட பாலர் பாடசாலைகளில் பயிற்சிபெறாமல் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

மாநகராட்சி மன்றசுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்படவிருக்கும் இப் பயிற்சி நெறியில் சனசமூக நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள் என்பவற்றினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.



06.07.1970

மறைவு
28.08.1992

## பஞ்சரட்ணம் நிமல்


(பேராதனை பல்கலைக்கழக
பொறியியல்பீட மாணவன)
2ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

**திதி: 16.09.1993**

தம்பிக்குட்டி உன்விழிபார்த்து மொழிகேட்டு
ஆண்டொன்று ஆனதடா
பார்வந்து தேற்றிடினும் தேறவில்லைநெஞ்சங்கள்
ஓய்வில்லை உன் நினைவு
நிமி உன் பாதங்களை இறையடியில் காண
நிதமும் நாம் இறையடியை இறைஞ்சுகிறோம்.

அப்பா, அம்மா, அக்கா,
(6028) உறவினர்கள், நண்பர்கள்.

# இரண்டாண்டு நினைவில்...



| தாய் அணைப்பில்: | மண் அணைப்பில்: |
|---|---|
| 25 | 16 |
| — | — |
| 08 | 09 |
| — | — |
| 1976 | 1991 |

## வீரவேங்கை கல்கத்

[மார்க்கண்டு மதனரூபன்]

(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)
புத்தூர் கிழக்கு, புத்தூர்

தமிழர்களின் தாகமதை தரணியெங்கும் பறைசாற்றி
தமிழீழம் என்ற மூச்சினைக் கொண்ட
தானைத்தலைவன் வழியினில் நடந்து
பாயும் புலியென பகைவன் கதை முடித்தாய்
வரலாறு காணும் மணலாறு மண்ணிலே
வீரகாவியம் படைத்த கல்கத் துடன்
மரணித்த சக மாவீரர்களின் இரண்டாண்டு
நினைவை நெஞ்சாற சுமக்கின்றோம்.

16. 09. 1993 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள் உறவினர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(5913) - குடும்பத்தினர்

சதீஸ் (சாம்பட்டி சுந்தரம் சதீஸ்குமார் - மட்டு)

திருமலை - நிலாவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

லெப். சங்கீலி (மாரிமுத்து மகேந்திரராசா - சிவன்கோவிலடி - திருமலை)

சரவணன் (சோமசுந்தரலிங்கம் சிறுகுமார் - லிங்கநகர் திருமலை)

யோகன் (தம்பிராசா சந்திரசேகரன் - சாம்பல்தீவு- திருமலை

கோணேஷ் (கந்தையா இளங்குள் - சலப் ஒழுங்கை திருமலை)

இதே முற்றுகையின்போது சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

கந்தசாமி ( — — நிலாவெளி - திருமலை)

முல்லைத்தீவு - முள்ளியவளைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 04 தமிழர்கள்.

1986ஆம் ஆண்டு மட்டு - காஞ்சிரங்குடாப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

2ம் லெப். கனெக்ஸ் (ஞானமுத்து பேனாட் வேலன்- கல்முனை - அம்பாறை)

ராஜ்குமார் (தங்கதம்பி சந்திரதாஸ்-கல்முனை அம்பாறை)

நீலன் (மயில்வாகனம் இளகுமார்-தம்பிலுவில்-அம்பாறை)

1987ஆம் ஆண்டு வவுனியா - நெடுங்கேணி பகுதியில் தேசத்துரோதசக்திகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

யோகன் (சுப்பிரமணியம் தயாநிதி - பாரதிபுரம்- வவுனியா)

1989ஆம் ஆண்டு கள்ளிக்காட்டுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கணேஷ் (கு சந்திரசேகரன்-கருநாட்டுக்கேணி-மணலாறு)

1990ஆம் ஆண்டு யாழ் - கோட்டைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

2-ம் லெப். நிமலன் / கிட்டு (மாணிக்கம் ஜெயசுதனன்- துப்பனை - பருத்தித்துறை - யாழ்)

இதேபகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

சுபாகினி (சரஸ்வதி சின்னக்கண்டு- இளமையாணல்மேற்கு உடுப்பிட்டி - யாழ்)

மன்னார் விடத்தல் தீவுப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

கப்டன் ஜெயா (சந்தியோகு பெரேரா தேவசகாயம் பெரேரா - உயிலங்குளம் -மன்னார்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் சங்கிலி (கதிரமலை அமரசிங்கம் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

கப்டன் வில்பட் (கணபதிப்பிள்ளை எதிர்மன்னசிங்கம் - களுவாஞ்சிக்குடி- மட்டு)

2ம் லெப். பிரியன் (சின்னத்தம்பி யோகராசா- கொக்கட்டிச்சோலை - மட்டு)

தேவேந்திரன் (கந்தப்பு மணியன் - 2-ம் குறிச்சி, பழுகாமம் - மட்டு)

சுரேன் (இராசரட்ணம் நவநீதன் - துறைநீலாவணை - மட்டு)

குலேஸ் (வைரமுத்து இளங்கோ - வெள்ளையடிமடு, வாகரை - மட்டு)

லெப். கிறிஸ்டி (பாக்கியதுரை தங்கராசா - 1-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை)

2-ம் லெப் குட்டி (தங்கராசா கிருஷ்ணதாஸ் - உப்புவெளி - திருமலை)

வண்ணன் (சிவஞானசுந்தரம் ஜீவா - 2-ம் வட்டாரம், வீரச்சோலை - திருமலை)

வாணன் (ஆறுமுகம் கணேசமூர்த்தி - மூதூர்- திருமலை)

லெப். சிரான் (சிசுலிங்கம் சிவனேசன் - ஒதடுங்கேணி - மணலாறு)

2-ம் லெப் ரவிராஜ் (மல்லாகன் சுந்தரமோகன்- நெடுங்கேணி - மணலாறு)

... - வவுனியா)

சாயகுமார்/புலவன் (வடிவேலு சுந்தரகுமார் - மகாரம்பைக்குளம் , வவுனியா)

காந்தி [மரிமுத்து சதாசிவம் ரவிச்சந்திரன் - மன்னார் வீதி - வவுனியா]

கப்டன் கஸ்ரோ (இராமசாமி குமார் - இரத்தினபுரம் - கிளிநொச்சி)

கப்டன் பகீரதன் [கிருஷ்ணபிள்ளை அருணகிரிநாதன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி]

கிரஞ்சீவி [வசந்தமணி ஏகாம்பரம் - வன்னேரிக்குளம்- கிளிநொச்சி]

சுரேஸ் [கந்தையா கனகலிங்கம் - உருத்திரபுரம்- கிளிநொச்சி]

இதயா (தேவரஞ்சினி தம்பிராசா - புளியம்பொக்கணை, கிளிநொச்சி)

சுபன் [கோவிந்தசாமி கணேசசேகரன் - தர்மபுரம்- கிளிநொச்சி)

கிருஷ்ணா மோகன் (சிவகுமார் சுதன் - கண்டாவளை பரந்தன் - கிளிநொச்சி)

கப்டன் காசன் [ஏகலிராசா யோகேந்திரன் - பள்ளிக்குடா - பூநகரி]

2-ம் லெப். சார்ஜகா [மேரிமாக்கிரெற் தங்கராசா- வட்டக்கண்டல் - மன்னார்]

ஜனனி (சுகிர்தாதேவி கறுப்பையா - முருங்கன்- மன்னார்]

தொமித்ரா [செல்வி கப்பு - பேசாலை - மன்னார்]
வலிகாமம் தாக்குதல் படைப்பிரிவுப் பொறுப்பாளர்,

மேஜர் பவா (நாராயணன் தவராசன் - தும்பளை - பருத்தித்துறை)

லெப் பூபதி (பிறேமலதா இராசமாணிக்கம் - சந்தி ஒழுங்கை - வல்வெட்டித்துறை]

லெப். டொமினிக் மாஸ்ர [நடேசன் குமரேசன் - நீர்வேலி வடக்கு - யாழ்]

லெப் மாதவன் [யோகர் குணராஜ் - 4-ம்குறுக்குத்தெரு ,பருத்தித்துறை]

லெப் சண் [கல்விபுரம் புவனேந்திரராசா - நாவற்குழி- யாழ்]

2ம் லெப் கந்தசாமி (வேலுப்பிள்ளை மகேந்திரன்-கதகோவளம் -பருத்தித்துறை -யாழ்)

2-ம் லெப். எட்றிச் (சிவசாமி கிருபாகரன் - அல்வாய் மேற்கு, பருத்தித்துறை - யாழ்)

2ம் லெப். இரட்ணம் (நிததியானந்தசிவம் சுகுபரன்- திலீபன்வீதி, கொண்டாவில் கிழக்கு யாழ்)

டொறின் (தவராணி யோககுரு - வேம்படி வல்வெட்டித்துறை)

றொசாலி (தவராணி சிவசுப்பிரமணியம் பொலிகண்டி- வல்வெட்டித்துறை)

லோஜி (கௌரிமலர் தர்மலிங்கம்-கேடில்ஸ்நகர், தெல்லிப்பழை)

காஞ்சனா (சாந்தி அருமைத்துரை - சுதுமலை தெற்கு யாழ்)

திலீப் (தங்கவடிவேல் கிருஷ்ணகுமார் குராவத்தை- சுன்னாகம் -யாழ்)

கிரிசாந்/கல்கத் [மார்க்கண்டு மதனரூபன் - புத்தூர் கிழக்கு யாழ்]

டயானி / டயானியல் [நடராசா வாசுதன் -நீதிமன்றவீதி மல்லாகம்-யாழ்]

சேகர் [ஏகாம்பரம் குணசேகர் - நல்லூர் - யாழ்]

ஈஸ்வரன் [புஸ்பராஜா கஜேந்திரன் - சித்தன்கேணி, வட்டுக்கோட்டை - யாழ்]

பிரதீப் பத்மநாதன் லட்சுமணன் - 4-ம் கட்டை, கோப்பாய் - யாழ்]

இளஞ்செழியன் (மருதலிங்கம் றதீஸ்குமார் - மல்லாகம் - யாழ்)

சுருளி (தெய்வேந்திரம்வசந்தராசா - சுதுமலை தெற்கு - மானிப்பாய் - யாழ்]

மகான் [முருகேசபிள்ளை தியாகராசா - வண்ணார் பண்ணை - யாழ்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7427]

### சிந்தனைக்கு

நோய்வாய்ப்பட்டிருக்கையில், தான் நலமுடன் இருப்பதாக எண்ணுபவன், அழியும் பேராபத்தில் இருக்கின்றான்.

- தாமஸ் புல்லர்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05


# பல சமர்களின் தோல்வி யுத்தத்தின் தோல்வியே

"ஒரு சமரில் பெற்ற வெற்றி முழு யுத்தத்திலும் பெற்ற வெற்றியாகாது" எனவும், "இவ்வாறான தோல்விகள் எதிர்பார்க்கப்படுவனவையே" எனவும் சிறிலங்காவின் தற்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அண்மைக்காலத்தில் இராணுவம் சந்தித்த தோல்விகளுக்குச் சப்புக்கட்டுக் கட்டியுள்ளார்.

விழுந்தவன் மீசையில் மண்படவில்லை என்பது போன்ற இவ்விளக்கமானது, ஜெனரல் ஹமில்டன் கூறியது போல் ஒரு சமரில் மட்டும் சிறிலங்கா இராணுவம் தோற்றுப் போயிருந்தால் சிலவேளை கருத்திற் கொள்ளப்பட்டிருக்கலாம். ஆனால், சிறிலங்கா இராணுவம் தொடர்ச்சியாகப் பல தோல்விகளைச் சந்தித்து வரும்போது, ஹமில்டனின் இவ் விளக்கமானது சிறுபிள்ளைத்தனமானது என்றே எண்ண வைக்கிறது.

சிறிலங்கா இராணுவம் இரண்டாம் கட்ட ஈழப் போர் தொடங்கிய பின்னர், பெரும் தோல்விகள் பலவற்றைச் சந்தித்து வந்துள்ளது. அதிலும், 1992, 1993ஆம் ஆண்டுகளில் அவை சந்தித்த தோல்விகள் இராணுவத்திற்குப் பெரும் உயிரிழப்பையும், பொருளிழப்பையும் ஏற்படுத்தியுள்ளமை சகலருமே ஏற்றுக் கொண்டதொன்று. இவ் இழப்புக்களினால், இராணுவ நடவடிக்கைகளே மந்த நிலையை அடைந்தன என்பதே உண்மை.

அதிலும் குறிப்பாக, 1992 மார்ச்சில், மணலாற்றில் 'ஒப்பரேசன் சிக்சரின்' போது இடம்பெற்ற மோதலும், ஓகஸ்டில் அராலித்துறையில் இடம்பெற்ற கண்ணி வெடிச் சம்பவமும், ஒக்டோபரில் நிகழ்ந்த கட்டைக்காட்டுத் தாக்குதலும், இவ்வாண்டு யூலையில் இடம்பெற்ற மண்கிண்டி மலை இராணுவ முகாம் மீதான தாக்குதலும், கடந்தமாதம் யாழ். கடல் நீரேரிப் பகுதியிலும், பருத்தித்துறைக் கடற்பரப்பிலும் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களும் சிறிலங்கா இராணுவக்...

## உலகத்தின் விலையாகினான்

பல்லவி

புயலாகப் போர்தன்னில் புறப்பட்ட புலியொன்று
பசிதின்று படுத்திட்டதோ? - இங்கு
அயராது தமிழீழம் தனைக்காத்த திருமேனி
அனல் கொண்ட மெழுகானதோ?
(புயலாகப்)

சரணங்கள்

வெளிச்சொல்ல முடியாது வரியாலே
கொடைதன்னை
வரம்பின்றி விரிவானது - என்றும்
விழியோரம் முளைக்கின்ற விழிநீரில் எம்சோகம்
விடைபெற்று முடியாதது
(புயலாகப்)

ஈராறுநாட்களாய் இந்தியர்க் கெதிராக
உண்ணாது போர்தொடுத்தான் - ஈழப்
பேராசையால் வந்த பாரதப் பூமிமுன்
பார்த்திபன் பேர் எடுத்தான்
(புயலாகப்)

செத்திட்டவன் எங்கள் திலீபனா இல்லையே
சாகாவீரம் ஏகினான் - இன்று
ஒப்பந்தம் வைத்தெமை நிர்ப்பந்தம் செய்தவன்
செத்திட்டவன் ஆகினான்
(புயலாகப்)

தலைவன்தன் வழிவந்த புலிவீரன் தமிழர்கள்
தலமெங்கும் நிலையாகினான் - இந்த
உலகத்தின் சிகரத்தில் உதிக்கின்ற இவனின்று
உலகத்தின் விலையாகினான்.
(புயலாகப்)

- இளந்திரையன்

## கொழும்பில்தொடரும் கைது 400 பேர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தொடர்ந்து பல தமிழர்கள் சிறிலங்கா பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பல தடுப்பு முகாம்களிலும், பொலிஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சென்ற வெள்ளிக்கிழமை மட்டும் நடைபெற்ற சுற்றிவளைப்பின் போது பல தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்ற போதும் தொடர்ந்து 90 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிய வருகின்றது.

இதேவேளை கடந்த மூன்று வாரங்களில் சிறிலங்கா பொலிஸாரும் குற்றத் தடுப்புப் பிரிவினரும் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 400க்கு மேற்பட்ட தமிழர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் ஆறு பெண்கள் உள்ளடங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு தங்கியிருப்பதற்கு வீடுகளை வாடகைக்கு கொடுத்த வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்றும் இவர்கள் இச் சந்தேக நபர்கள் தொடர்பான தகவல்களை வெளியிடாமையே காரணம் என அச் சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

தியாகி

...பருத்துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன் அவர்கள் மலர்மாலை அணிவித்தார். அதனைத்தொடர்ந்து போராளிகளும், பொதுமக்களும் தியாகி திலீபனின் உருவப்...

## சிறிலங்காவிதிக்கும்தடைக்கு இந்திய அரசு ஆட்சேபம்

### இந்தியத் தூதர் வெளியுறவு செயலருடன் சந்திப்பு

### மத்திய கிழக்கிலிருந்தும்

# இலங்கை திரும்புவோருக்கு சுங்க பரிசோதனை இல்லை

(கொழும்பு)

வேலைவாய்ப்புப்பெற்று மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்கள் நாடுதிரும்புகையில் இனிமேல் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள்.

இதற்கான நடவடிக்கையினை தொழில், தொழில் பயிற்சி அமைச்சர் எம். எல். எம். அபுசாலி எடுத்திருக்கின்றார். அத்துடன் மத்திய கிழக்கில் இருந்து நாடுதிரும்பும் இலங்கையர்கள் விமான நிலையத்தில் இருந்து வெளியேறுவதற்கு வழி ஒன்றும் ஏற்படுத்தப்படும்.

கடந்த வியாழக்கிழமை காலை கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் சென்ற அமைச்சர் அபுசாலி மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு திரும்பியவர்களைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

மத்திய கிழக்கு நாடுகளிற்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களுக்கு ஏற்படும் 'பாஸ்' பிரச்சினைக்கு முடிவு காண்பதற்காக விமான நிலையத்தில் உள்ள சகல பிரிவுகளிலும் தமிழ் தெரிந்த ஒவ்வொரு உத்தியோகத்தர்களை பணிக்கமர்த்துமாறும் அமைச்சர் அபுசாலி விமான நிலைய அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார். இதேவேளை ...மத்திய கிழக்குப் பயணிகள் ...நாள் ...சொந்த இடங்களிற்கு பயணத்தை மேற்கொள்ளக்கூடியதாக ஒரு கட்டடத்தை விமானநிலையத்தில் ஒதுக்குமாறும் அதிகாரிகளை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மத்திய கிழக்கு செல்லும் எயார்லங்கா விமானங்களில் தமிழ் பேசக்கூடிய ஒரு தமிழ் பணிப்பெண்ணையும் பணிக்கமர்த்த வேண்டும் என்றும் அமைச்சர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

மத்தியகிழக்கிற்குவேலைவாய்ப்பிற்குச்சென்ற இலங்கையர்களில் 1992இல் இலங்கையர்க்கு கிடைத்த அந்நியச்செலாவணி 2300 கோடி ரூபாஆகும் இதில் 56 சதவீதம் மத்திய கிழக்கில் வீட்டுப் பணிப்பெண்களாக பணியாற்றியவர்களினால் கிடைத்ததாகும் என்றும் அமைச்சர் அபுசாலி தெரிவித்தார்.

## சமாதானப் பேச்சுக்கள் புலிகளைபலப்படுத்தகூடாது

- கண்டி மாவட்ட எம். பி.

(கொழும்பு)

"சமாதானம் அவசியம் தான். ஆனால் சமாதானப் பேச்சு விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதாக அமைந்து விடக்கூடாது" என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வி. எல். ஜெயரட்ண கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், "வடக்கு கிழக்கில் சமாதானம் ஏற்பட வேண்டும் என உரத்துப் பேசப்படுகிறது. சமாதானம் அவசியம் தான். ஆனால் இது விடுதலைப் புலிகளின் கரத்தைப் பலப்படுத்துவதாக அமைந்து விடக்கூடாது. சமாதானப் பேச்சு ஒன்றுமறியாத பாமர மக்களின் உயிருக்கு உத்தரவாதம் அளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் பொதுமக்களுக்குத் தெரியாமல் பேச்சுவார்த்தை இரகசியமாக நடைபெறுமாயின் அதன் பலன் பூச்சியமாகவே இருக்கும்" என்றார்.

## சத்திரசிகிச்சைக்கு வருவோர் சாரம் எடுத்துவர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்போதனா மருத்துவமனைக்கு சத்திரசிகிச்சைக்காக நோயாளிகள்வரும்போது சாரம் ஒன்றை எடுத்துவரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சத்திரசிகிச்சைக்காக வரும் நோயாளிகள் சாரம் இன்றி வருவதனால் சத்திரசிகிச்சை நடைபெற்ற பின் நோயாளி அவர் அணிந்து வரும் உடைகளை திரும்பவும் அணிய முடியாத நிலையில் நோயாளிகள் தமது வசதியைகருத்திற்கொண்டுசத்திர சிகிச்சைக்கு வரும் போது சாரம் கொண்டுவரும்படி மருத்துவமனை வட்டாரங்கள் கேட்டுள்ளன.

## ஆலய உற்சவத்திற்காக பாதுகாப்பு வலயமாக்குக!

### வல்லிபுர ஆலய நிர்வாகம் கோரிக்கை

(நமது நிருபர்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவம் செவ்வாய் ஆரம்பமாகியது.

இதனை ஒட்டி மேற்படி ஆலயம் அமைந்துள்ள பகுதியினை பாதுகாப்புப்பகுதியாக அறிவித்து தாக்குதல்கள் எதையும் சிறிலங்காப் படையினரை மேற்கொள்ளாமல் இருக்குமாறு கோரி பாதுகாப்பு ...பகுதியில் அரச அதிபர் ஊடாக ஆலய நிர்வாகத்தினர் வேண்டுகோள் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

இவ்வேண்டுகோள் யாழ் செயலகத்தின் மூலம் பாதுகாப்பு அமைச்சிற்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆலயத்தில் தொடர்ந்து பதினாறு நாட்கள் உற்சவகால விழாக்கள் நடைபெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

...டத்திற்கு மலரஞ்சலிசெலுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களும், யாழ். மாவட்ட செயலகத்தின் மேம்பாட்டுநிறுவனத்தின்... கலைப்பிரகாசம் அவர்களும் நினைவுரை ஆற்றினார்கள்.

இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளுடன் தியாகி திலீபனின் நினைவாக பல்வேறு இரத்ததான...

அனித்தா பாடசாலையின்

## பொருட்காட்சி

- ஆடை தயாரிப்பு
- சமையற் கலை
- உள்ளக அலங்கரிப்பு
- சிகை அலங்காரம்
- கேக் தயாரிப்பு
- மணமகள் அலங்கரிப்பு

உங்கள் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாகும் பொருட்காட்சி

காலம் : 19-09-1993 – 21-09-1993
நேரம் : காலை 9மணி - மாலை 6 மணிவரை
இடம் : பூநாறி மரத்தடி, கொக்குவில்,

(சி-7426)


## நினைவில் 2-ம் ஆண்டு



### வீரவேங்கை எட்வின்

(சின்னையா பிரபாகரன்)

அன்னையின் மடியில்: 1972-10-11
மண்ணின் மடியில்: 1991-09-16

வெறும் வார்த்தைகளில் நீங்கள்
விளக்சப்பட முடியாதவர்கள் – அதனால்தான்
மாறும் காலங்களாலும் எம் காயங்களை
ஆற்றிவிட முடியவில்லை.

(சேர்ந்தொன்றாய் விதையானோரையும் பணிகிறோம்)

எட்வின் வீதி,
செம்மலை, மணலாறு.

குடும்பத்தினர்
(6021)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



# கடல் தடை சட்டம் தொடர்பாக இந்திய-சிறிலங்கா அதிகாரி பேச்சு

(கொழும்பு)

கடல் தடை சட்டம் தொடர்பாக இந்தியத் தூதுவர் நரேஷ் வேல்தயால் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேனாட் திலகரட்ணாவுடன் நேற்று முன்தினம் விரிவாக ஆராய்ந்ததாக தெரியவருகின்றது.

அண்மையில் நடைபெறவிருக்கும் தமிழ் நாட்டு தேர்தல்களில் இப்பிரச்சினையை முக்கிய தேர்தல் பிரசாரமாக அமையும் என்றும் இதனால் பல பிரச்சினைகளை இந்தியாவில் ஆளும் கட்சி எதிர் கொள்ளும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த நிலையை தவிர்க்க சிறிலங்காவில் போடப்பட்ட இக்கடல்தடை சட்டம் தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

## கடல்வலய தடைச்சட்டம் தேர்தலை பாதிக்குமா?

### இந்.காங்கிரஸ் அச்சம்

தமிழகத்தில் நடைபெற இருக்கும் பழனி, இராணிப்பேட்டை இடைத்தேர்தலை சிறிலங்கா அரசு விதித்திருக்கும் கடல்வலயச் சட்டம் பாதிக்குமா என்று இந்திரா காங்கிரஸ் கட்சி அஞ்சுவதாக தெரிய வருகிறது.

மேற்படி தேர்தலின் போது மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லமுடியாத நிலைமையை தேர்தல் கோசமாகப் பயன்படுத்தக் கூடும் என்றும் இக்கட்சி அஞ்சுகிறது. அதே வேளை மேற்படி கடல் வலயச் சட்டத்தை நீக்கும்படி இந்தியா விடுத்த வேண்டுகோள் குறித்து ஆராய்வதில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.


POSTPONEMENT

யாழ். மருத்துவ சங்கம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

17.09.93 வெள்ளிக்கிழமை காலை 11-00 மணிக்கு நடைபெற இருந்த மேற்படி பொதுக் கூட்டம் பின்போடப்பட்டுள்ளது என்பதைச் சகல அங்கத்தினர்க்கும் அறியத்தருகிறேன்.

அசௌகரியங்களுக்கு வருந்துகிறேன்

Dr. A. சைலைநாதன்
கௌரவ செயலாளர்

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
15-09-93

(6033)



## தையல்

பெண்கள், சிறுவர், குழந்தைகளிற்கான தையல் வேலைகள் நாகரிகமான முறையில் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும். அவசரவேலைகள் உடனடியாக செய்துகொடுக்கப்படும்.

**எழிலகம்** பருதி கடை தொகுப்பு
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7430]



நெல்லியடி வர்த்தகர் சங்கம்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நெல்லியடி வர்த்தக நிலையங்களை இரவு நேரம் காவல் புரிவதற்கு ஆறு காவலாளிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தகைமைகள்:- நெல்லியடியிலிருந்து ஐந்து மைல் சுற்றளவிற்குள் வசிப்பவர்.
வயது 22—50க்குள் இருக்க வேண்டும்.

22-9-93 மாலை 3 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர் சகல அத்தாட்சிப் பத்தி


## கூமண வந்தடைந்தது

(யாழ்ப்பாணம்)

ஒரு தொகுதி அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு "கூமண" கப்பல் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் புறப்பட்டு வந்த யாழ் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் மற்றும் சிலரையும் இக்கப்பல் பருத்தித்துறையில் இறக்கி விட்டு காங்கேசன் துறை சென்றுள்ளது.

தற்சமயம் பருத்தித்துறையில் மாவை இறக்கிக் கொண்டிருக்கும் "வாதுவ" கப்பல் மா இறக்கி முடிந்ததும். "கூமண" கப்பல் பருத்தித் துறையில் பொருள்களை இறக்குமென தெரியவருகின்றது.

(பா), (நி)


தியாகி திலீபன்

வாய் முத்துமாரியம்மன் கோவிலடி புலோலி வடக்கு. வட/கிழக்கு மக்கள் பனை வட்டம் பனை பிரதேச சபைக்கு முன்னால் தம்பசாமம் சிற்றூர் உற்பத்திக்குழு, விறகு வெட்டுவோர் சங்கம், கொடிகாமம் வட்டம் புகையிரத


## அனுமதி பெறாது ஐஸ்கிறீம்விற்பனைக்குதடை

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனுமதி பெறாமல் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

சுகாதார சீர்கேடான முறையில் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம், ஐஸ்பழம் போன்றவற்றை சைக்கிள் மற்றும் வாகனங்களில் எடுத்து வந்து மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் விற்பனை செய்வதால் அப் பகுதிகளில் சமீபகாலமாக குடல்நோய்கள் மற்றும் தொற்றுநோய்களும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள் தயாரிக்கப்படும் இடத்திலிருக்கும் உணவு அதிகாரியிடம் இருந்து உற்பத்தி செய்வதற்கான அனுமதியை பெறுவதுடன் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில் விற்பனை செய்வதற்கான அனுமதியை சண்டிலிப்பாய் சங்கானை பிரதேச செயலகங்களின் உணவு அதிகாரியிடம் பெற்ற பின்பே விற்பனைசெய்ய அனுமதிக்கப்படுவரென மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

[சி]

குவைத்தில் வேலையிழந்தோர்

## நட்டஈடு பெறுவதற்கு விண்ணப்பிக்கப் பணிப்பு

(கொழும்பு)

குவைத்தில் யுத்தம் காரணமாக வேலையிழந்த இலங்கையர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவிருப்பதால் அவர்களை உடனடியாக நட்டஈட்டுக்கு விண்ணப்பிக்குமாறு ஐக்கிய நாடுகள் நட்டஈட்டுச் சபை கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் நட்டஈட்டுச் சபை இலங்கை அதிகாரிகளுக்கு இதனை அறிவித்துள்ளது. இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் நட்டஈடு கோரும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் திரு. எஸ். எம். எச். பி. செனவிரத்ன கூறியுள்ளார்.

குவைத் மீது ஈராக் படை எடுத்ததன்விளைவாக குவைத்திலுள்ள வேலை இழந்த 90 000 திற்கு மேற்பட்ட இலங்கையர்கள் ஏற்கனவே நட்டஈடு கோரி விண்ணப்பித்துள்ளனர்.

[பா]

## பரிசளிப்பு விழா

யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா -1993, நிறுவுநர் தினம் 65ஆம் ஆண்டு மலர் வெளியீடு என்பன இன்று காலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10911

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-2024. 24-6439, 26-3146. 41-1227, 26 4139, 41-1531, 42-2151, 26 2414. 24-4153. 26 0535, 24-6855. 24-9744, 28-0882, 41-9396, 24-4701,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-6639, 42-4935. 22-5852, 28-7662, 22-6163

## மரண அறிவித்தல்கள்

திருமதி



## வீரவேங்கை எட்வின்

(சின்னையா பிரபாகரன்)

அன்னையின் மடியில்: 1972-10-11

மண்ணின் மடியில்: 1991-09-16

வெறும் வார்த்தைகளில் நீங்கள்
விளக்கப்பட முடியாதவர்கள் — அதனால்தான்
மாறும் காலங்களாலும் எம் காயங்களை
ஆற்றிவிட முடியவில்லை.

(சேர்ந்தொன்றாய் விதையானோரையும் பணிகிறோம்)

எட்வின் வீதி,
செம்மலை, மணலாறு.

குடும்பத்தினர்

(6021)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 11-8-1967

வீரச்சாவு 16-9-1991

## 2-ம் லெப். கந்தசாமி

(வேலுப்பிள்ளை மகேந்திரம்)

(16 9.91 அன்று மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.)

மண் மாதா துயர் துடைக்க
மார் தட்டி களம் புகுந்து
எண்ணற்ற படைகள் தம்மை
எதிர்த்துமே வதைத்த செய்கை
மணலாறு மட்டுமல்ல
மக்களின் உள்ள மெல்லாம்
மணியாய் ஒலிக்குதைய்யா
மறந்திடுமோ நம் நெஞ்சம்.

இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

கற்கோவளம் (6031) — குடும்பத்தினர்


# எழிலகம்

பகுதி கடை தொகுப்பு
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/7430]


நெல்லியடி வர்த்தகர் சங்கம்

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

நெல்லியடி வர்த்தக நிலையங்களை இரவு நேரம் காவல் புரிவதற்கு ஆறு காவலாளிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

தகைமைகள்:- நெல்லியடியிலிருந்து ஐந்து மைல் சுற்றளவிற்குள் வசிப்பவர்.
வயது 22—50க்குள் இருக்க வேண்டும்.

22-9-93 மாலை 3 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர் சகல அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்.

மு. கு. முன்பு காவல் வேலையில் ஈடுபட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நெல்லியடி. (3448)

எமது மழலைச்செல்வத்தின்

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 12 — 03 — 1974



தமிழீழ மண்ணில் 16 — 09 — 1990

## 2-ம் லெப்டினன்ட் நிமலன்/சிட்டு

(பாலசிங்கம் ஜெயவதனன்)

[யாழ். கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்.]

எட்டாம் நல் வகுப்பினிலே என் மகனே வீறு புலிப்
பட்டாளம் சேர்ந்து பல பயிற்சிகளும் பெற்றாயே
கட்டாரும் கோட்டை வெளிக் களத்தினிலே காத்து நின்ற
நிமலா உன் மறைவெண்ணி சிந்தையோ கலங்குதடா
விண்ணுலகம் முன்புகுந்த வெம்புலிகள் கூடி நின்னை
நன்னிவரவேற்றனரோ நல்லமிர்தம் ஊட்டினரோ.

தும்பளை,
பருத்தித்துறை. (6032)

நிமலன்
குடும்பத்தினர்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


நிலையங்களை அதிகாரி ஒருவர் மற்றும் சிலரையும் இக்கப்பல் பருத்தித்துறையில் இறக்கி விட்டு காங்கேசன் துறை சென்றுள்ளது.

தற்சமயம் பருத்தித்துறையில் மாவை இறக்கிக் கொண்டிருக்கும் "வாதுவ" கப்பல் மா இறக்கி முடித்ததும். "குமண" கப்பல் பருத்தித்துறையில் பொருள்களை இறக்குமென தெரியவருகின்றது.

(பா), (நி)

### தியாகி திலீபன்

வாய் முத்துமாரியம்மன் கோவிலடி புலோலி வடக்கு, வட/கிழக்கு மக்கள் பளை வட்டம் பளை பிரதேச சபைக்கு முன்னால் தம்பகாமம் சிற்றூர் உற்பத்திக்குழு. விறகு வெட்டுவோர் சங்கம், கொடிகாமம் வட்டம் புகையிரத நிலைய அருகாமையில் கலைவாணி ச. ச. நி தாவளை, இயற்றாலை. எழுதுமட்டுவாள் தெற்கு, ஸ்ரீகணேசா ச. ச. நி. உசன் ம. வித்தியாலயம் கொடிகாமம் அ. த. க. பாடசாலை, சாவகச்சேரி வட்டம் மணம்குணாப் பிள்ளையார் கோயில் முன்னால் சாவா நகர், மட்டுவில் வடக்கு, நுணாவில் மேற்கு, கைதடி. நுணாவில் சாவகச்சேரி வடக்கு, ப. நோ. கூ. சங்கம் றிபேக் கல்லூரி, சரசாலை சரஸ்வதி வித்தியாசாலை, கைதடி வட்டம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் மறவன் புலோ சிற்றூர், பசுபதி ச. ச. நி. பலலிருவர் பாலர் பாடசாலை, நாவற்குழி ம. வித்தியாலயம், தீவகக் கோட்டம் நல்லூர் கோவில் முன்றலில் தீவக ப. நோ. கூ. சங்கம், வேலணை மத்திய மகாவித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி வித்தி.

### சிரமதானம்

சிரமதானப் பணிகள் பின்வரும் இடங்களில் இடம் பெறவுள்ளன. சங்கானை வட்டத்தில் பொது மக்களால் ஈஸ்வரி வீதி திருத்தம் சண்டிலிப்பாய் வட்டம் நவாலி வடக்கு மகாஜன வளர் மதி ஆனைக்கோட்டை வீதி துப்புரவு உடுவில்/தெல்லிப்பழை வட்டத்தில் தியேட்டர் முகாம் மக்களால் இணுவில் சந்தையடி கிணறு துப்புரவு செய்தல். கரவெட்டி வட்டத்தில், கரணவாய் மதி பொது மயானம் துப்புரவு செய்தல் உடுப்பிட்டி வட்டத்தில் பொன். கந்தையா சா. ச. நிலைய உறுப்பினர் பொது மக்களால் கம்பர்மலை பண்டிதர் வீதி புனரமைப்பு பருத்தித்துறை வட்டத்தில் புலோலி வணிகர் சங்கம் பொதுமக்களால் மந்திகைச் சந்தை துப்புரவு செய்தல் தீவகக் கோட்ட மக்களால் பண்டிதர் குடியிருப்பு குளம் புனரமைத்தல் செம்மாதெரு வாய்க்கால் துப்புரவு கிணறு இறைத்தல்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10911

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-2024, 24-6439, 26-3146, 41-1227, 26 4139, 41-1531, 42-2151, 26 2414, 24-4153, 26 0535, 24-6855, 24-9744, 28-0882, 41-9396, 24-4701,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-6639, 42-4935, 22-5852, 28-7662, 22-6163

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா தங்கரெத்தினம்

திருமதி நடராசா தங்கரெத்தினம் 15-9-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலம் சென்ற நடராசாப் பத்தரின் அன்பு மனைவியும், பழனித்துரை, சறோஜினி தேவி [கொழும்பு], புவனேஸ்வரி [வவுனியா], லலிதா, ஆனந்தகுமார் [கொழும்பு], வசந்தகுமாரி [கனடா], சத்தியகுமார் [டோகா], பிறேமளா, தயாபரன் [கனடா], காலம் சென்ற சிவகுமார், வானதி ஆகியோரின் அன்புத் தாயாரும், கல்யாணி, யோகேஸ்வரன், முத்துலிங்கம், பாலசிங்கம், சந்திரலதா, மனோகரன், தர்மராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கேமலதா, றஜிதா, றஞ்சித், உஷா, ஜெயந்தி, விஜிதா, கவிதா, சுமித்ரா, பபிதா, சுஜிதா, துஷ்யந்தன, நிறுஷன், சஞ்சயன், கிஷோதன், வசீகரன், நிவேஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 16-9 93 இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:

39, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

ந. பழனித்துரை
(மகன்)

(6038)

## இளங்கேஸ்வரன் மோகனராஜ்

(யாழ். இந்துக் கல்லூரி மாணவன்)

இளங்கேஸ்வரன் மோகனராஜ் 12-9-93 அன்று கொழும்பில் காலமானார். கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட (யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர்) இளங்கேஸ்வரன், தனலஷ்மி ஆகியோரின் இளைய புதல்வனும், தே. வானதி (ஜேர்மன்), ம. சுமதி (பிரான்ஸ்), இ. தேவராஜ் (பிரான்ஸ்), இ. கோபிராஜ் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரனும், கௌதம் (ஜேர்மன்), கிஷோந்தன் (ஜேர்மன்), ஸ்யாம் (ஜேர்மன்), தமிழினி (ஜேர்மன்). மனோஜ் (பிரான்ஸ்), டினேஷ் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், கௌதமன் (பிரான்ஸ்) இவரின் சித்தப்பாவும். தேசிங்கராசா (ஜேர்மன்), மனோகரன் (பிரான்ஸ்), தே. தேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

இவரின் ஈமக்கிரியைகள் (13-9-93) அன்று கொழும்பில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

42, பலாலி றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [6039]

நா. சின்னத்துரை
(மாமா)